## நல்லூர் பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 30 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் நல்லூர் பிரதேச சபையின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 980,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரப் பெட்டி, நீர்த்தாங்கி வாகனங்கள் என்பன மோட்டார் வாகன பெறுமதியினுள் உள்ளடக்கப்படாமையினால் மோட்டார் வாகனம் ரூபா 980,000 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | உழவு இயந்திரப் பெட்டி, நீர்த்தாங்கி வாகனங்களும் 2019 இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதும் மோட்டார் வாகன பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வாகனத்தின் பெறுமதிகள் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் | | | |
| | பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆதனவரி நிலுவை சம்மந்தமாக சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி | | | |
| | நிதி ஒழுங்கு விதி இல 371 | கடந்த 05 வருடங்களிற்கு மேலாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்வு செய்யப்படாமலுள்ளது. | ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிக்கமைய தீர்க்கப்படாத முற்பணங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 04 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படும். | சுற்று நிருபத்திற்கமைய எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளபபடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) ஏனைய சுற்றறிக்கை 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி – 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1 % சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | 1% சதவீத விற்பனை வரி அறவிடப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 94,352,534 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,175,857 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 7,885,681 | 32,133,985 | 5,182,204 | 9,200,340 | 2,770,000 | 34,513,760 | 2,615,824 | 6,912,057 |
| வாடகைகள் | 32,133,985 | 3,795,548 | 32,153,770 | 933,390 | 34,513,760 | 3,420,000 | 34,551,173 | 961,240 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,652,000 | 166,394,873 | 9,124,477 | 23,000 | 3,420,000 | 129,022,790 | 7,107,178 | 48,000 |
| ஏனைய வருமானம் | 150,233,185 | 7,885,681 | 161,185,843 | 30,741,458 | 129,022,790 | 2,770,000 | 90,540,291 | 40,140,429 |
| | 195,904,851 | 210,210,087 | 207,646,294 | 40,898,188 | 169,726,550 | 169,726,550 | 134,814,466 | 48,061,726 |
| | ======== | ======== | ======== | ======= | ======== | ======== | ======== | ======= |

**2.2.2 வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிறுதியில் காணப்பட்ட ரூபா 9,200,339 பெறுமதியான வீதவரி நிலுவைகளை அறவிடப்பட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வீதவரி நிலுவையினை அறவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சந்தைக்கடை வாடகை நிலுவை ரூபா 691,489 வினை அறவிடப்படுவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரூபா 691,489.74 காலங்கடந்த வருமான நிலுவை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | சந்தைக்கடை வாடகை நிலுவைகளினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,568,505 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையாகவுள்ள நீதிமன்றத் தண்டப்பணத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பண நிலுவை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,123,276 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முத்திரை கட்டண நிலுவையினை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | உபவிதிகள் முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உபவிதிக்கமைய விடயங்களை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 5,354,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணி 07 வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ்வாண்டு இறுதிக்குள் பாதை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளை பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா 19,931,507 பெறுமதியான 23 வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆரம்பத் திகதிகளில் வேலைகளை ஆரம்பிக்கப்படாதவிடத்து ஒப்பந்தங்களை இரத்துச் செய்ய இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு திண்மக் கழிவகற்றல் செலவினமாக ரூபா 19,013,541 செலவு செய்யப்பட்ட போதிலும் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகள் பிரதேச சபையினால் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு ஏற்ப உரிய நடவடிக்கைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(உ) சுற்றுச்சுழல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொசுக்கள் நுளம்புகள் பரவுவதை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடிப்பது மற்றும் துர்நாற்றத்தை தடுக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சோலைவரி அறவீட்டுக்காக ஆதன உரிமையாளர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் K படிவம் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உரிய காலத்தில் K படிவம் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுக்களஞ்சியப் பொருட்கள், ஆயுள் வேத களஞ்சிய பொருட்கள், மின்சார கருமங்கள் களஞ்சிய பொருட்கள் என்பவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளில் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் நடப்புச் சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் சீர் செய்யப்படும். | களஞ்சிய பொருட்களின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 13 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தினுள் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 1,250,000 பெறுமதியான சந்தை காணி கட்டடங்களினை பிரதேச சபைக்கு உரிமைமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காணியினை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டின் செலவினங்களுக்கும் உண்மையான செலவினங்களுக்கும் இடையே கணிதத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவதால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | விலகல்களினை கருத்திற்கொண்டு பாதீடு தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |